எம்.சி.ஓ.பி எண்: 1204/2022 தேதி: 13.11.2025

எ,மசா. : 2

பெயர் : ஜவகர்

த/பெ. : செந்தமிழ் செல்வன்

வயது : 35

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் புலன் ஆய்வு அதிகாரி கிடையாது. எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகன பதிவெண் TN-19-AM-8256 வாகனம் முதல் தகவல் அறிக்கையின் படி 10.02.2022 அன்று விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டு காயம் பட்ட நபர் 3-ம் தரப்பினர் என்றால் சரிதான். அதற்கான பிரிமியம் ரூபாய் 5453/- கட்டப்பட்டுள்ளது என்றால் சரி. விபத்து சமயத்தில் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் அடிப்பட்டு காயம்பட்ட நபர் 3-ம் தரப்பினர் என்பதால் எந்த காப்பீடு விதிமுறைகள் இருந்தாலும் நாங்கள் தொகையை கொடுத்துவிட்டு அதை உரிமையாளரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.